பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 07 செவ்வாய்க்கிழமை 25.10.2022 கதிர் 241

## பாடசாலை இடைவிலகல் வடக்கில் சடுதியாக உயர்வு

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தின் பின்னர் வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

2020ஆம் ஆண்டு 485 8

# பொங்கலுக்கு இன்னொரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை



## மனோவிடம் ரணில் நேரில் உறுதி

தீபாவளியில் விடுவிக்கப்பட்டதைப் போல், தைப்பொங்கலுக்கு இன்னொரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கத் தான் எண்ணியுள்ளார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடம் தெரிவித்தார்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரச தீபாவளி விழா நடைபெற்றது. இதில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர்கள் 8

## ஒரு வருடத்துக்குள் அரசியல் தீர்வு:

# ரணிலின் வாக்குறுதியை வரவேற்கிறார் சுமந்திரன்




### கூட்டமைப்பு முழு ஆதரவு எனவும் யாழில் இன்று பகிரங்க அறிவிப்பு

(இ.கலையமுதன்)

இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு புதிய அரசமைப்பினூடாக ஒரு வருட காலத்துக்குள்ளே செய்து முடிக்கப்படும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 2

## சிறுவன் மீது வாள்வெட்டு!

யாழ். இணுவில் கலாஜோதி விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இடம்பெற்ற வாள் வெட்டுத் தாக்குதலில் 17 வயது சிறுவன் ஒருவன் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளான்.

உரும்பிராயைச் சேர்ந்த முருகதாஸ் மனோஜ் என்ற பாடசாலையிலிருந்து இடைவிலகி பான்சிப் பொருள்கள் விற்பனை 8

## இளைஞர் மீது மோதியது பஸ்

யாழ். இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேந்தான்குளம் வசந்தபுரம் பகுதியில் தனியார் பஸ் மோதியதில் அந்தப் பகுதியைச் சேர்ந்த நோபட் நிலக்சன் (வயது – 19) என்ற இளைஞர் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:–

நேற்று மாலை கீரிமலை பிரதான வீதியில் சேந்தான்குளம் வசந்தபுரம் பகுதியில் தனது வீடு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த இளைஞர் மீது, பின்னால் வந்த தனியார் பஸ் மோதிவிட்டு நிற்காது சென்றுள்ளது. 8

## இலங்கை தோல்வியடைய இன, மத வெறியே காரணம்

### முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டு



இனவாதமும் மதவாதமும் இலங்கைத் திருநாட்டைத் தோல்வியடைய வைத்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

'இன, மத வாதங்களால் 8

## திடீரெனத் செயலிழந்திருந்த 'வட்ஸ் அப்'




இலங்கை, இந்தியா உட்பட்ட பல நாடுகளில் இன்று 'வட்ஸ் அப்' செயலிழந்திருந்தது.

இதன் காரணமாக 'வட்ஸ் அப்' ஊடாக எந்த வித தொடர்புகளையும் ஏற்படுத்த முடியாமல் இருந்தன. இதனால் பயனர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். இந்தநிலையில் கட்டமைப்பில் 8

## வவுனியாவில் மாணவர்களிடையே வேகமாகப் பரவும் போதைப் பாவனை



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மாணவர்களிடையே வேகமாகப் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதால் பெற்றோரும், பாடசாலை சமூகத்தினரும் விழிப்பாக இருக்க வேண்டும் என்று மாவட்ட சிறுவர் உரிமை 2

## சிறீதரன், சார்ள்ஸ் எம்.பிக்கள் மயிலிட்டி மக்களுடன் சந்திப்பு



யாழ்ப்பாணம் மாவட்டம், மயிலிட்டிப் பிரதேச மக்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் 2

## ஜனாதிபதி செயலத்தில் தீபாவளி நிகழ்வு



இந்துக்களின் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் சிறப்பு தீபாவளி நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.

**(விரிவான செய்தி 7 ஆம் பக்கத்தில்)**

## ரணிலின் வாக்குறுதி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசமைப்பினூடாக இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு காண்பது தொடர்பான வேலைத்திட்டம் உடனடியாக நடைபெற வேண்டும். அதை ஜனாதிபதி முன்னெடுக்கின்ற போது எங்களுடைய முழுமையான இணக்கப்பாடும் முழுமையான ஆதரவும் அதற்கு இருக்கும் என்பதே எங்களுடைய உத்தியோகபூர்வநிலைப்பாடாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த காலப்பகுதியில் எவ்வளவு சேர்ந்து செயற்பட்டோம் என்பதை அவர் அறிவார்.

2016 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து நாடாளுமன்றம் அரசமைப்பு பேரவையாக மாற்றப்பட்ட காலத்திலிருந்து ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இதற்கான முன்னெடுப்புக்காக வழிகாட்டல் குழு எல்லாம் அமைக்கப்பட்டது.

அந்த வழிகாட்டல் குழுவிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் நானும் அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றோம்.

புதிய அரசமைப்பு தொடர்பான இரண்டு இடைக்கான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஜனவரி மாதம் இரண்டாவது இடைக்கால அறிக்கையோடுநிபுணர்குழுவினால்வரையப்பட்ட ஒரு முழுமையான அரசமைப்பு வரைவு கூட அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்து ஜனாதிபதி தேர்தலிலே ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக முன்நின்ற சஜித் பிரேமதாஸவுடைய தேர்தல் அறிக்கையிலே அந்த முயற்சியில் தொடர்ந்து செயற்பட்டு முடிவை எட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டது.

2016 ஆம் ஆண்டு அரசமைப்பு பேரவையாக உருவாக்கப்பட்டு பலவித கூட்டங்கள், கலந்துரையாடல்கள், மக்கள் சந்திப்புகள் செய்யப்பட்டு மாகாண சபைகளுடைய பிரதிநிதித்துவத்தையும் பெற்று விசேடமாக தென்பதியிலுள்ள ஏழு மாகாண சபைகளை உள்ளடக்கி வேலை செய்யப்பட்டது.

அதனடிப்படையில் தொடர்ந்து முன் செல்ல ஜனாதிபதி ஆவணம் செய்ய வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்திலே இந்த வேலை செய்யப்பட்டது. இதனை வெகு விரைவாகத் தொடர்ந்து முன்னெடுத்தால் ஒரு வருட காலத்துக்குள் இதனை முடிவுக்குக் கொண்டு வரலாம். ஒரு வருடம் கூடத் தேவை இல்லை. அனைவருடைய இணக்கப்பா ட்டோடு சகல மக்களுடைய ஆதரவோடு புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் கருத்தை வரவேற்கின்ற நேரத்தில் இதற்கு முன்னர் பங்களித்ததைப் போலவே முழுமையான பங்களிப்பைப் கொடுப்போம் என ஜனாதிபதிக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

இதேவேளை, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் 8 தமிழ் அரசியல் கைதிகள் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அதற்கு ஜனாதிபதிக்கும், அரசுக்கும் நன்றிகள். சிறையில் வாடும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை – என்றார்.

## வவுனியாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெயக்கெனடி தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் இளைஞர், யுவதிகளின் தற்போதைய நிலை தொடர்பில் இன்று கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் நகரை அண்டிய சில பாடசாலைகளில் சில மாணவர்கள் மற்றும் சில மாணவிகள் போதைப்பொருள் பாவனையில் ஈடுகின்றனர் என்று எமக்குத் தனிப்பட்ட ரீதியிலும், பொலிஸார் ஊடாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு ஏற்ப அவர்களை அதில் இருந்து விடுபடச்செய்வதற்கான நடவடிக்கைகள் எம் மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் பல பாடசாலைகளில் மாணவர்கள் போதைப்பொருட்களைக் கொண்டு வருவதாகவும், அதனை தமது சக மாணவ, மாணவிகளிடம் கைமாற்றுவதாகவும் தகவல் கிடைத்துள்ள போதும் சில பாடசாலைகள் தமது பாடசாலையின் பெயரைக் கருத்தில் கொண்டு அதனை வெளிக்கொண்டு வரத் தயக்கம் காட்டுகின்றனர்.

மாலை வேளைகளில் வவுனியா வைரவப்புளிங்குளம், பூங்கா வீதி, குடியிருப்பு, குருமன்காடு உள்ளிட்ட பகுதிகளுக்கு வரும் வெளிப் பகுதிகளைச் சேர்ந்த இளம் சமூகத்தினர் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பிலும் அவர்களது நடத்தைகள், அவர்களது நண்பர்கள், அவர்கள் சென்று வரும் இடங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் மாணவ சமூகத்தின் மீது அக்கறையுடன் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் வகையில் பாடசா லைகளில் தமது செயற்பாடுகளை முன் னெடுக்க வேண்டும். வடக்கில் யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனால் ஏற்படும் விபரித விளைவுகள் குறித்து நாம் தினமும் அறிந்து வரும் நிலையில் வவுனியா மாவட்டத்தில் இந்த நிலை அதிகரித்து வருகின்றது. இதனால் அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டு போதைப்பொருள் பாவனையற்ற சமூகத்தை உருவாக்க முன்வர வேண்டும் – என்றார்.

இதேவேளை, வவுனியாவில் உள்ள அரச வைத்தியர் ஒருவர் தனது தனியார் மருத்துவ நிலையம் ஊடாக மாதாந்தம் 400 பெட்டி போதை மாத்திரைகளை கொள்வனவு செய்து வந்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறீதரன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு மயிலிட்டி வடக்கு கிராம அபிவிருத்திச்சங்கமண்டபத்தில்நடைபெற்றது.

குறித்த பிரதேச மக்களின் கோரிக்கைக்கு அமைய நடைபெற்ற மேற்படி சந்திப்பின் போது, பலாலி விமானத்தள விஸ்தரிப்பு என்ற போர்வையில் பூர்வீகத் தமிழ் மக்களான மயிலிட்டி மக்களுக்குச் சொந்தமான ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான காணிகளைச் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், காணி சுவீகரிப்புத் தொடர்பில் அண்மையில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட கடிதத்தில் மூவாயிரம் ஏக்கர் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் அதன்கீழ், தங்கள் காணிகளும் பறிபோய்விடுமோ எனத் தாம் அச்சமடைகின்றனர் எனவும் மயிலிட்டி மக்கள் தெரிவித்தனர்.

அது தொடர்பிலான முழுமையான விவரங்களோடு, காணி சுவீகரிப்பைத் தடுப்பதற்கான தொடர் நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில், மயிலிட்டி மீள்குடியேற்றச் சங்கத்தினர், மயிலிட்டி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## அரசமைப்பு உருவாக்கம்

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலரும் எதிர் பார்த்தபடி இன்று அறிவித்துவிட்டது.

இந்தப் புதிய அரசமைப்பு அடுத்த ஒரு வருடத்துக்குள் முற்றுப் பெற வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அவ்வளவு காலம் தேவையில்லை, அதற்கு முன்னரே அதனை ஒப்பேற்றி முடிக்க முடியும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் எம்.பி. தெரிவித்திருக்கின்றார்:

நல்லாட்சி அரசில் அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி கணிசமான தூரம் முன்னேறித் தடைப்பட்டு இருக்கிறது.

ஆட்சி முறைமை, அதிகாரப் பகிர்வு, தேர்தல் சீர்திருத்தம் ஆகிய மூன்று அடிப்படைகளில் முதல் இரண்டு தொடர்பிலும் அந்த முயற்சியின் போது முழு அளவில் இணக்கம் காணப்பட்டிருந்தது. தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில்தான் கருத்து வேறுபாடுகள் நிலவின.

ஆகையால் 2019 இல் இடைநிறுத்தப்பட்ட அந்த முயற்சியை அந்தக் கட்டத்தில் இருந்து மீள ஆரம்பித்து, தேர்தல் முறைமை தொடர்பான இணக்கத்தை ஏற்படுத்தி, அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியை பூர்த்தி செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது வலியுறுத்தி இருக்கின்றது.

இதில் இன்னொரு முக்கிய அம்சமும் உண்டு. 2019 ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸா கூட தமது அப்போதைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியை விட்ட இடத்தில் இருந்து தான் தொடர்ந்து முன்னெடுத்துப் பூர்த்தி செய்வார் என்று வாக்குறுதி அளித்திருந்தார். அதனால், அந்த முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது மீண்டும் ஆரம்பிக்கும் போது அதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டிய கடப்பாடு சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும் கூட உண்டு.

புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்காக 2016 இல் அப்போதைய நாடாளுமன்றம் அரசமைப்பு பேரவையாக தன்னை மாற்றி நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

அது விட்ட இடத்தில் இருந்து அந்தப் பணியை தொடர்வதற்கு இப்போதைய நாடாளுமன்றத்தையும் கூட அந்த பணியை முன்னெடுக்கும் சமயத்தில் அரசமைப்பு பேரவையாக மாற்றிச் செயல்பட வைக்க முடியும்.

அப்போதைய அரசமைப்பு உருவாக்க முயற்சி அந்த மட்டத்தில் தடப்பட்டு போனமைக்கு தாங்கள் காரணம் அல்லர் என அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதல் ஒவ்வொரு அரசியல் தலைவரும் பிற்காலத்தில் கூறிவந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் தமது அந்தக் கூற்றின் நேர்மைத் தன்மையை நிரூபிக்கும் விதத்தில், இப்போது அது மீள ஆரம்பிக்கப்படும் போது அதற்கு சார்பான பிரதிபலிப்பை காட்ட முடியும். பார்ப்போம் என்ன செய்வார்கள் என்பதை.

# சந்திரிக்காவை கொலை செய்ய திட்டமிட்ட கைதிகள் விடுதலை!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை படுகொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப் பட்ட மூன்று கைதிகள் உட்பட 8 தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு நேற்று (திங்கட்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

அரசமைப்பின் 34 ஆவது சரத்தின்படி, இலங்கை நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், சிறையிலுள்ள 8 தமிழ் கைதிகளுக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல தடவைகள் நடத்திய கலந்துரையாடல்களின் பலனாக இந்தக் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னதாக ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டின் பேரில் கைதிகள் தொடர்பான தகவல் கண்காணிப்பு மேற்கொள்ளப் பட்டது. கைதிகள் விடுதலை தொடர்பான ஒப்புதல் அறிக்கை தொடர்பாக நீதி அமைச்சர் மற்றும் அவர் மூலமாக சட்டமா அதிபர் ஆகியோரின் கருத்து பெறப்பட்டதன் பின்னரே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்த தமிழ் கைதிகளில் மூவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கொலை செய்ய முயன்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள்.

இவர்கள் தொடர்பாக ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கருத்தை வினவியுள்ளதோடு அவரின் இணக்கப்பாட்டுடன், இவர்களின் விடுதலைக்குத் தேவையான ஆரம்ப கட்ட முன்னெடுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய 4 கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதோடு இவர்கள் எதிர்காலத்தில் அனுபவிக்க வேண்டியுள்ள தண்டனை காலத்தைக் குறைத்து இவ்வாறு விடுதலை செய்யப்பட உள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புபட்டிருந்த மற்றுமிரு தமிழ் கைதிகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்படவுள்ளதுடன் மேலும் இரு கைதிகள் ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் எதிர்வரும் காலங்களில் விடுவிக்கப்படவுள்ளனர்.

30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 22 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த மூன்று கைதிகள், 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தற்போது 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஒருவர், 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 14 ஆண்டுகள் தண்டனை அனுபவித்து ஒருவர். 05 வருட சிறைத்தண்டனைக் காக 14 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கும் இருவர் மற்றும் 19 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 11 வருடங்களாக தண்டனை அனுபவித்து வரும் ஒருவர் இதில் அடங்குகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கேமிங் மற்றும் சூதாட்ட வரி மற்றும் கசினோ வரி 150 வீதம் அதிகரிப்பு

கசினோ நிலையங்களுக்கான வருடாந்த வரி 20 கோடியிலிருந்து 50 கோடியாக 150 விகிதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் சூதாட்ட விடுதிக்கான வருடாந்த வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

கேமிங் மற்றும் சூதாட்ட வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக்க நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மற்ற பந்தயம் மற்றும் விளையாட்டுகளுக்கான வரிகள் குறைந்தபட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

நேரடி பந்தய மையங்களுக்கு –

ஆண்டு வரியை 6 லட்சத்தில் இருந்து குறைந்தது 10 லட்சமாக உயர்த்துதல்.

10 வீதம் விற்றுமுதல் வரியை குறைந்தபட்சம் 15 வீதம் ஆக உயர்த்துதல்.

பந்தயதுணை முகவர்களுக்கான வருடாந்த வரி 40 லட்சம் ரூபாயிலிருந்து குறைந்தது 50 லட்சம் ரூபாவாக அதிகரிப்பு.

நேரடி அல்லாத பந்தய சந்தைகளுக்கு ஆண்டு வரி 50 ஆயிரத்தில் இருந்து 75 ஆயிரம் ரூபாவாக உயர்வு.

இவை அனைத்துக்கும் பிறகு, அந்த வணிகங்களின் வருமானம் அல்லது லாபத்தின் மீது 40 லீதம் வருமான வரி விதிக்கப்படுகிறது.

இது தவிர, மதுபானம் மற்றும் புகையிலை மீதான வரிகள் பின்வருமாறு.

மதுபான போத்தலுக்கு குறைந்தபட்சம் 75 வீத வரி விதிக்கப்படுகிறது.

சிகரெட்டுகளுக்கு கிட்டத்தட்ட 85 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இறுதியில், அந்த நிறுவனங்களின் லாபத்தில் இருந்து 40 வீத வருமான வரி விதிக்கப்படுகிறது.

அதற்கான வரிகள் போன்றவற்றை உயர்த்த நிதி அமைச்சு முடிவு செய்துள்ளது.


# மட்டு. அபிவிருத்திக்குழு தலைவராக மீண்டும் சிவநேசதுரை சந்திரகாந்தன்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப் பட்டுள்ளார்.

சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவினால் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவராக நியமிக்கப்படட்டிருந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவி விலகியதைத் தொடர்ந்து மாவட்ட அபிவிருத்திக்குழுவின் பதவிகள் வறிதாகியிருந்தன.


மீண்டும் 21.10.2022 முதல் செயற்படும் வண்ணம் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராக சிவநேசதுரை சந்திரகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மியான்மார் சிறுபான்மையினர் மீதான வான்தாக்குதலில் அறுபது பேர் சாவு!

## இராணுவ ஆட்சியில் அட்டூழியம்






பாங்காக், ஒக்.25

மியான்மார் நாட்டில் சிறுபான்மையினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற நானூறுக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்ற கூட்டம் ஒன்றில் மேற் கொள்ளப்பட்ட வான்வழித் தாக்குதலில் 60பேர் கொல்லபட்டனர் எனக் கூறப்படுகின்றது.

மியான்மர் நாட்டில் கச்சின் மாநிலத்தில் அங் சங் சூ தலைமையிலான அரசு நிர்வாகத்தினர் செயல்பாட்டில் இருந்தனர். ஆனால் கடந்த 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தற்போது முழுகட்டுப்பாடும் இராணுவத்தின் கீழ் சென்றுள்ளது.

இந்த நிலையில் மியான்மரின் கச்சின் மாநிலத்தில் கச்சின் இன சிறுபான்மையினரின் முக்கிய அரசியல் அமைப்பின்

ஆண்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் இசைக்கலைஞர்கள், அமைப்பினர், பொதுமக்கள் என நானூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருந்த நிலையில் திடீரென மியான்மர் ராணுவத்தினரால் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த திடீர் தாக்குத லில் இதுவரை 60க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். இதில் பாடகர்கள், இசைக் கலைஞர்கள், பொது மக்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ ஆட்சி நடைமுறைக்கு வந்த பிறகு நடைபெற்ற பெரிய மற்றும் முதல் வான் தாக்குதலாக இது கருதப்படுகிறது. ஆனால் இதுகுறித்து மியான்மர் இராணுவம் மற்றும் அரசு ஊடகங்கள் மௌனம் சாதித்து வருகின்றன.

மியான்மரின் அட்டூழியங்கள் குறித்து விரிவான ஆலோசனை கூட்டம் தென்கிழக்கு ஆசிய வெளிநாட்டு அமைச்சர்கள் சார்பில் கூட்டம் நடக்க இருந்த நிலையில் இந்தக் கோரத் தாக்குதல் அரங்கேறி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியக் கப்பலில் திடீரென பரவிய தீயில் 14 பயணிகள் மரணம்





ஜகார்த்தா, ஒக்.25

இந்தோனேசியாவில் நடுக்கடலில் பயணித்துக் கொண்டிருத்த கப்பலில் ஏற்பட்ட திடீர் தீ விபத்துக் காரணமாக கப்பலில் பயணித்த 14பேர் உடல்கருகிப் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஏராளமான தீவுகளைக் கொண்ட இந்தோனேசியாவின் கிழக்கு நூா தெங்காரா பகுதிக்கு உட்பட்ட குபங்க் தீவில் இருந்து கலபாஹி தீவுக்கு நேற்று காலையில் 230 பயணிகளுடன் ஒரு கப்பல் புறப்பட்டது. அந்த கப்பலில் மாலுமிகளுடன் சேர்த்து மொத்தம் 240 பேர் இருந்துள்ளனர். அந்த கப்பல் கடலில் சென்று கொண்டிருந்த போது, திடீரென கப்பலில் தீப்பிடித்ததாகக் தெரிவிக்கப்பட்டது.

அந்தத் தீ மளமளவென கப்பல் முழுவதும் பரவி எரிந்தது. இதனால் மாலுமிகள் உடனடியாக இதுபற்றி பேரிடர் மீட்பு படையின ருக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் மீட்பு கப்பலில் விரைந்து வந்து தீவிபத்து ஏற்பட்ட கப்பலில் இருந்த பயணிகளை மீட்டனர்.

இருப்பினும், அவர்களில் 14 பயணிகள் தீயில் உடல் கருகிப் பலியானார்கள். இந்த விபத்துக் குறித்து பொலிஸார் விசாரணை களை நடத்தி வருகிறார்கள். இந்தச் சம்பவம் இந்தோனேசியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நாட்டையும், கட்சியையும் முன்னேற்றுவதற்கே முன்னுரிமை என ரிஷி சுனக் நேற்று அறிவிப்பு

## பிரதமராகத் தெரிவானதும் அவர் தெரிவிப்பு



நான் விரும்பும் கட்சிக்கும், எனது நாட்டுக்கும் சேவையாற்றுவதே என் வாழ்வில் கிடைத்த மிகப் பெரும் பாக்கியம் என்று தெரிவித்துள்ளார் இங்கிலாந்தின் புதிய பிரதமர் ரிஷி சுனக்.

நேற்றையதினம், இங்கிலாந்து வரலாற்றில் முதன்முறையாக இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக் அந்நாட்டின் பிரதமராகப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். அவர் விரைவில் இங்கி லாந்தின் பிரதமராகப் பொறுப்பேற்கவுள்ளார்.

இந்த நிலையில், பிரதமராக தெரிவுசெய்யப்பட் டுள்ள ரிஷி சுனக்கிற்கு, ஆளும் கொன்சர்வேடிவ் கட்சியின் லண்டனில் உள்ள தலைமை அலுவ லகத் தில் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. அங்கு அவர் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் –

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றதற்காகவும், கொன்சர்வேடிவ் மற்றும் யூனியனிஸ்ட் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக் கப்பட்டமையிலும் நான் பணிவுடன், பெருமையும் அடைகிறேன். நான் விரும்பும் கட்சிக்கும், என் நாட்டிற்கும் சேவையாற்றுவது எனது வாழ்வின்

மிகப்பெரிய பாக்கியம். இங்கிலாந்து ம க்களுக்காக நான் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் உழைப்பேன். நான் நேர்மையுடனும் பணிவுடனும் உங்களுக்கு சேவை செய்வேன் என்று உறுதி யளிக்கிறேன்.

மேலும், நாட்டிற்காக லிஸ் டிரஸ்ஸின் அர்ப்பணிப்பான பொதுச் சேவைக்காக நான் அவருக்கு மரியாதை செலுத்த விரும்புகிறேன். இங்கிலாந்து ஒரு சிறந்த நாடு. ஆனால் நாம் ஆழமான பொருளாதார சவாலை எதிர்கொள்கிறோம் .நமக்கு இப்போது ஸ்திரத்தன்மையும் ஒற்றுமை யும் தேவை. நம் கட்சியையும் நாட்டையும் ஒன்றாகக் கொண்டு வருவதை நான் எனது அதிகபட்ச முன்னுரிமையாகக் கருதுகிறேன். அதுதான் சவால்களை சமாளித்து, நம் குழந்தைகள் மற் றும் பேரக்குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஒரே வழி என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தென் – வட கொரிய படையினர் அடுத்தடுத்து துப்பாக்கி பிரயோகம்; தீபகற்பத்தில் பதற்றம்!

சியோல், ஒக்.25

தென்கொரியா மற்றும் வட கொரிய இராணுவத்தி னர் தமக்கிடையில் வான் நோக்கி துப்பாக்கிச் சூடுகளை நடாத்தியமையால் கொரியத் தீபகற்பப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டதாகக் கூறப்படு கின்றது.

அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் – கண்டம் விட்டுக் கண்டம் பாயும் – ஏவுகணைகளை

சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப் போது அதிர்ச்சி கொடுத்து வருகிறது வடகொரியா. குறிப்பாக, தன் எதிரி நாடுகளாகக் கருதும் தென் கொரியா மற்றும் அமெரிக்காவைச் சீண்டும் வகையில் தொடர்ந்து ஏவுகணைச் சோதனை நடத்தி வருகிறது.

குறிப்பாக, கடந்த சில நாள்களாக அடுத்த டுத்து ஏவுகணை சோதனை நடத்தி கொரிய தீபகற்பத்தில் வடகொரியா போர் பதற்றத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில், தென்கொரியாவும் வடகொரியாவும் நேற்று அடுத்தடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தங்கள் நாட்டின் கடற்பரப்பிற்குள் வடகொரியாவின் வர்த்தகக் கப்பல் நேற்று அதி காலை 4 மணயளவில் நுழைந்ததாகவும் அதை

எச்சரிக்கும் வகையில் கடற்படையால் வானத்தை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட தாகவும் தென்கொரியா தெரிவித்தது.

இதற்குப் பதிலடியாக வடகொரியாவும் 10 முறை வானத்தை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தி

தென்கொரியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இரு நாட்டு கடற்படையும் மாறி மாறி துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பிரிட்டிஷ் ராணி கமிலா பெங்களூருக்கு வருகை

## ஆயுர்வேத சிகிச்சை பெற



பெங்களூர், ஒக்.25

பெங்களூரில் ஆயுர்வேத சிகிச்சை பெறுவதற்காக இங்கிலாந்து ராணி கமிலா இந்தியாவுக்கு வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. பத்து நாள்கள் பெங்களூரில் தங்கி இருந்து அவர் சிகிச்சை பெறவுள்ளார். ராணி ஆகிய பின்பு அவரது முதல் பயணம் இதுவாகும்.

ராணி கமிலா, இதற்கு முன்பு 7 முறை பெங்களூருக்கு வந்திருந்தார். ஆனால் அவர் ராணியாகப் பதவி ஏற்ற பின்பு முதல் பயணமாக பெங்களூருக்கு வந்துள்ளார்.

பெங்களூர் ஒயிட்பீல்டு பகுதியில் ஓர் ஆயுர்வேத சிகிச்சை மையம் உள்ளது. அந்த மையத்தில் சிகிச்சை பெறுவதற்காக ராணி கமிலா வந்திருக்கின்றார் எனத் தெரியவந்துள்ளது. அதாவது தன்னை அழகுப்படுத்திக் கொள்வதற்காக ஒயிட்பீல்டில் உள்ள ஆயுர்வேத மையத்தில் ராணி சிகிச்சை பெற்று வருகிறார். அவர் 10 நாள்கள் ஆயுர்வேத மையத்தில் தங்கி இருந்து சிகிச்சை பெறுகிறார். இது அவரது தனிப்பட்ட பயணமாகும். இதன் காரணமாக அவர் எந்த ஒரு நிகழ்ச்சிகளிலும்

பங்கேற்பது இல்லை. மேலும் பொதுமக்களும் அவரைச் சந்திக்க அனுமதியும் கிடையாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்தே ஆயுர்வேத சிகிச்சை மையத்துடன் ராணி கமிலா தொடர்பில் இருந்து வருகின்றார்., ஏற்கனவே 7 முறை இந்த மையத்திற்கு வந்திருக்கின்றாரர். தற்போது 8 ஆவது முறை யாக சிகிச்சை பெற வந்திருக்கின்றார் என ஆயுர்வேத சிகிச்சை மையத்தின் தலைவர் ஐசாக் மதாய் தெரிவித்துள்ளார்.




# விழிப்புணர்வால் மேற்கு வங்கத்தில் தடுக்கப்பட்ட குழந்தைத் திருமணம்

கொல்கத்தா,ஒக்.25

பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வினால் பயன் பெற்ற 15வயதுடையசிறுமியொருவர் தனது சாதுரியத்தால் தனக்கு நடைபெறவிருந்த சிறுவயதுத் திருமணத்தைத் தடுத்து நிறுத்திய சம்பவம் மேற்கு வங்காளத்தில் இட்பெற்றுள்ளது.

மேற்கு வங்காள மாநிலம் புருலியா மாவட்டம் காசிப்பூர் கிராமத்தை சேர்ந்த சிறுமியொருவர் பாடசாலை ஒன்றில் 10 ஆம் வகுப்புப் படித்து வருகின்றார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கிராமத்தில் நடந்த குழந்தை திருமணம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அவள் கலந்துகொண்டாள். இந்த நிலையில் குடும்ப வறுமை காரணமாக அவளது பெற்றோர் அவளுக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர். ஆனால் தான் படிக்க விரும்புவதாக அவள் கூறியும் பெற்றோர் செவிசாய்க்கவில்லை. இதையடுத்து விழிப்புணர்வு நிகழ்ச்சியின்போது கூறப்பட்ட குழந்தைகள் நலத்துறை அவசர எண்ணுக்குத் தொடர்புகொண்டு பேசிய அந்தச் சிறுமி தனக்கு குழந்தை திருமணம் நடக்க உள்ளது பற்றி கூறியுள்ளார்.

உடனடியாக காசிப் பூர் கிராமத்திற்குச் சென்ற குழந்தைகள் நலத் துறை அதிகாரிகள் பூர்ணிமாவின் பெற்றோரிடம் குழந்தை திருமணத்தால் நடக்கும் பிரச்சினை குறித்து தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அந்தச் சிறுமிக்கு குழந்தை திருமணம் செய்யும் முடிவை பெற்றோர் கைவிட்டுள்ளனர். இதுகுறித்து அந்தச் சிறுமி கூறுகையில், கொரோனாவால் எனது தந்தைக்கு வேலை பறிபோனது. இதனால் குடும்ப வறுமை காரணமாக எனக்குக் குழந்தை திருமணம் செய்து வைக்க பெற்றோர் நினைத்தனர். ஆனால் எனக்கு நன்றாகப் படித்து செவிலியராக பணியாற்ற வேண்டும் என்று ஆசை உள்ளது என்றார்.

# 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் குடகில் கண்டுபிடிப்பு



குடகு மாவட்டம் விராஜ்பேட்டை தாலுகா கடங்கா–பரனே–நாபோக்லு வனப்பகுதியில் பழங்கால கோவில் இருப்பதாகக் கூறப்பட்டு வந்த நிலையில் இந்த வனப்பகுதியையொட்டி அமைந்துள்ள பொல்லுமாடு கிராம மக்கள் அந்த பகுதியில் சில இடங்களை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பழமையான கோவில்கள் இருப்பதுபோன்ற சில அடையாளங்கள் காணப்பட்டன. இதையடுத்து அந்த இடத்தை ஆழமாக தோண்டிப் பார்த்தபோது, அங்கு பழமையான கோவில் ஒன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. கிராம மக்கள் உடனே இது குறித்து தொல்லியல் துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு சென்ற அவர்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

அந்த ஆய்வுகளில் குறித்த கோவில் 12 ஆம் நூற்றாண்டை சேர்ந்த இந்து கோவில் என்று தெரியவந்தது. மன்னர் கால சிற்பங்கள் இடம் பெற்றிருந்ததால், அவர்களின் ஆட்சி காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டது.

இதையடுத்து அவர்கள் அந்த கோவில் கட்டுமானபணிகளை ஆய்வு செய்தனர். அங்கு பலிபீடம், முகப்பு மண்டபம், கருவறை, பவுலி, சிவலிங்கம், பீடம், சாமியின் வாள் உள்ளிட்ட அழகிய சிற்பங்கள் காணப்பட்டிருந்தன எனக் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் கோவிலின் மேற்கூரை மற்றும் கலசங்கள் சிதைவடைந்து காணப்பட்டன. அதுபோல, கோவிலின் வடமேற்கு திசையில் கிணறு ஒன்று இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆய்வு பணிகளை மேற்கொண்டு வரும் தொல்லியல் துறையின் ஓய்வுபெற்ற துணை கண்காணிப்பாளர் நைகண்ட சி.பிரகாஷ் கூறியதாவது:–

கோயிலின் கட்டடக்கலை உள்ளிட்ட பாணியை பார்க்கும்போது, இந்த கோவில் ஒய்சாலா மன்னர் காலத்தைச் சேர்ந்தது என்று தெரியவந்தது. அதாவது 12 ஆவது நூற்றாண்டை சேர்ந்தது என கூறலாம். கோவிலின் பவுலி 88 செ.மீ உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. அபிகேம் செய்யப்பட்ட நீர் சிவலிங்கத்திற்குச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தளத்தில் அகழ்வாராய்ச்சி செய்யும்படியான கூடுதல் தகவல்கள் இடம் பெற்றுள்ளன. இது குடகின் வரலாறு பற்றிய பல தகவல்களை வழங்குவதாக நம்பப்படுகிறது. எனவே அந்த இடத்தில் அகழாய்வு நடத்திக் கோவிலைப் பாதுகாக்கவேண்டும். என்று அவர் கூறியுள்ளார்.

# கொல்கத்தாவிலுள்ள வணிக வளாகத்தில் தீ விபத்தில் பல பொருள்கள் எரிந்து நாசம்..!!

கொல்கத்தா, ஒக்.25

கொல்கத்தாவை மையமாக கொண்டு இயங்குகின்ற வணிக வளாகம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் அந்தக் கட்டடம் சேதமடைந்தது டன், பல பெறுமதியான பொருள்களும் தீயிலெரிந்து நாசமாகியுள்ளன.

மேற்கு வங்காள மாநிலம் பரகானாஸ் மாவட்டத்தின் பண்டாலாவில் ஒரு வணிக வளாகக் கட்டடத்தில் இருந்த தோல் களஞ்சியத்திலேயே நேற்று மதியம் திடீரென்று தீப்பிடித்தது. அந்த தீ மளமளவென களஞ்சியத்தில் இருந்த தோல் பொருள்களில் பற்றிப் பிடித்து எரிந்தது. இதுபற்றி அறிந்ததும் 15 தீயணைப்பு வாகனங்களில் தீயணைப்பு படைவீரர்கள் அங்கு விரைந்து வந்து களஞ்சியத்தில் பிடித்த தீயைத் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து அணைத்தார்கள். மேலும் வணிக வளாகத்தின் கட்டடத்தில் சிக்கி இருந்த சிலரை தீயணைப்பு படை வீரர்கள் பத்திரமாக மீட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தீ விபத்துச் சம்பவத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தீ விபத்தில் அங்கிருந்த பொருட்களே தீயில் எரிந்து நாசமாகின. தீ விபத்திற்கான காரணம் குறித்து தீயணைப்பு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# குடிதண்ணீர் விநியோகத் தொகுதிகள் பொத்துவிலில் மக்களுக்கு கையளிப்பு









(பைஸல் இஸ்மாயில்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஸாரப்பின் வழிகாட்டலில் பொத்துவில் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் குடி தண்ணீர் தீர்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட முதலாவது மற்றும் இரண்டாவது குடி தண்ணீர் விநியோகத் தொகுதிகளை மக்களுக்கு கையளிக்கும் வைபவம் இடம்பெற்றுள்ளது.

பொத்துவில் பிரதேச செங்காமம் மற்றும் ஹிதாயாபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட தலா 50 ஆயிரம் லீற்றர் கொண்ட இந்த இரு குடிநீர் விநியோகத் தொகுதிகளை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வே நேற்று முந்தினம் இடம்பெற்றது.

பொத்துவில் பிரதேசத்தில் பல தசாப்த காலமாக குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் இப் பிரதேசங்களின் குடி தண்ணீர்த் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு அங்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, அதனூடாக பெறப்படும் நீர், நீர்த்தாங்கிகளில் சேமிக்கப்பட்டு. நிலக்கீழ் குழாய்வழியாக மக்களின் வீடுகளுக்கு நேரடியாகக் கொண்டு செல்லும் இத்தொகுதிகள் நாளொன்றுக்கு 500 குடும்பங்களுக்குத் தேவையான சுத்தமான குடி தண்ணீரை விநியோகிக்கக் கூடியவையாக அமைக்கப்பட்டுள்ளன.

குவைத் நாட்டின் அல்-நஜாத் தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியில், அந்நூர் நலன்புரிச் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டம் கடந்த 2021-06-16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தற்போது பூர்த்தியடைந்துள்ளது. அந்தத் தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் சமீஹ் ஷாகிர் அப்துல் அஸீஸ், செயற்றிட்ட முகாமையாளரான பொறியியலாளர் பஹத் இஹாப் முஹம்மத் அல்-தப்பூஸ், அந்நூர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் எஸ்.எம் அலியார், பணிப்பாளர் டாக்டர் ரிப்கி ரம்சான், பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எச் அப்துர் ரஹீம், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் வை.எல்.நியாஸ், பிரதேச சபையின் உறுப்பினர்கள், திட்ட அமுலாக்கல் குழு அங்கத்தவர்கள், பொதுமக்கள், பயனாளிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது, குவைத் அல் நஜாத் தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் சமீஹ் ஷாகிர் அப்துல் அஸீஸ், செயற்றிட்ட முகாமையாளர் பஹத் இஹாப் முஹம்மத் அல்-தப்பூஸ், அந்நூர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் எஸ்.எம் அலியார் உள்ளிட்ட பலரும் ஞாபகச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தீபத்திருநாள் விடே பூஜை



(பழுவூரான்)

தமிழர்களின் தீபத்திருநாளாம் தீபாவளி திருநாளை முன்னிட்டு, நேற்று காலை மட்டக்களப்பிலுள்ள ஆலயங்களில் விடே பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் பக்தர்கள் புடைசூழ, ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ஆதிசௌந்தரராஜா குருக்கள் தலைமையில் விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன்போது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல் நிலை நீங்கி, மக்கள் நிம்மதியோடும், சந்தோசத்தோடும் வாழ வேண்டி விடே யாகம் மற்றும் அபிகேம் என்பன நடத்தப்பட்டன.

இந்தப் பூஜை வழிபாடுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருமளவிலான மக்கள் வந்து கலந்து கொண்டிருந்தனர்.

## திண்மக்கழிவு பசளை உற்பத்தி நிலையம்; கல்முனையில் மீள ஆரம்பிக்க நடவடிக்கை







நூருல் ஹுதா உமர்

கல்முனை மாநகர சபைக்கு சொந்தமான பெரியநீலாவணை திண்மக்கழிவு பசளை உற்பத்தி நிலையம் சில காலம் செயற்படாமல் இருந்து வந்தது. கல்முனை பிராந்திய விவசாயிகளுக்கு சேதனப் பசளையின் தேவை அதிகமாக உள்ளதால் மீண்டும் இந்த நிலையத்தை இயக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் தலைமையில் இந்த பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை சுகாதாராப் பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் யு. எம். இஸ்ஹாக், சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் எம். ஏ. அதுகம் உட்பட கல்முனை மாநகர சபை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் சிறப்புற நடந்த தீபாவளி நிகழ்வு!





இந்துக்களின் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) மாலை சிறப்பு தீபாவளி நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் இந்து மத சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்ததுடன் நிகழ்வு மிகவும் எளிமையாக நடைபெற்றது.

இந்தநிகழ்வில்அமைச்சர்களானடக்ளஸ்தேவானந்தா, மனு நாணயக்கார, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான அகிலவிராஜ் காரியவசம், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, அனோமா கமகே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜா, கொழும்பு பிரதி மேயர் எம்.இக்பால், கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களான ஜெயராஜ் விஷ்ணுராஜ், கனகரஞ்சிதன் பிரணவன், துமிந்த ஆட்டிகல, மனோகரன் ஐக்கிய லக்வணிதா முன்னணி தலைவி சாந்தினி கோங்கஹகே, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# பல்கலைக்கழகக் கட்டமைப்பில் ஏற்படும் தாமதம் தவிர்க்கப்படும் மாணவர்கள் குறித்த காலத்திற்குள் கல்வியை முடிக்க சந்தர்ப்பம்!

## ஜனாதிபதி ரணில் உத்தரவாதம்




கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கும் போதே, இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டமைப்பில் நிலவும் கால தாமதம் தவிர்க்கப்பட்டு மாணவர்கள் குறித்த காலத்துக்குள் கல்வியை நிறைவு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் மாண குவத் தலைவர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில், றோயல் கல்லூரியின் சிரேஷ்ட மாணவத் தலைவர் கவீ ரத்நாயக்க தலைமையில் மாணவத் தலைவர்கள் சபையின் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கல்லூரியின் விவகாரங்கள் மற்றும் நாட்டின் கல்வித்துறையின் நிலைமைகள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், கல்வித்துறையின் முன்னேற்றத்துக்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி பதிலளித்தார்.

இங்கு, பல்கலைக்கழகக் கல்வி தொடர்பாக ஜனாதிபதி மாணவர்களிடம் கேட்டறிந்ததோடு, வெளிநாட்டு உயர்கல்வியில் பட்டம் பெற எடுக்கும் காலத்துக்கும் உள்நாட்டு பல்கலைக்கழகத்தில் எடுக்கும் காலத்துக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக மாணவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அதற்கான முறையான தீர்வு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாட்டுக் கல்வியை விட உள்நாட்டுப் பல்கலைக்கழகத்தின் கல்வியின் பெறுமதியை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாடசாலைக் கல்வியை முடித்து உயர்கல்விக்குத் தகுதி பெறும் மாணவர்களின் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், குருநாகல், மட்டக்களப்பு உட்பட பல பிரதேசங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் விரைவில் திறக்கப்படும் என்றும் தெரிவித்தார். அதேபோன்று, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை தனியான வளாகமாக மாற்றுவதற்கும், தேசிய வர்த்தக முகாமைத்துவ பாடசாலை மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் ஆகிய தனியார் பல்கலைக் கழகங்களுக்கு, தேசிய பல்கலைக்கழகத் தகைமைகளை வழங்குவதற்கு உள்ள வாய்ப்புகள் தொடர்பில் தாங்கள் செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகப் பகிடிவதைகள் தொடர்பாக மாணவர்களிடம் கேட்டறிந்த ஜனாதிபதி, றோயல் கல்லூரி, தர்ஸ்டன் கல்லூரி, ஆனந்தா கல்லூரி, டி.எஸ். சேனநாயக்கா வித்தியாலயம் போன்ற கொழும்பு பாடசாலைகளிலிருந்து வருடாந்தம் அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும், புதிய மாணவர் பகிடிவதைகள் இடம்பெறும் போது அவர்கள் அது தொடர்பில் மௌனமாக இருப்பதையே காணமுடிகிறதாகவும் குறிப்பிட்டார்.

பகிடிவதைகளைத் தடுக்கும் கடமை இந்தப் பாடசாலைகளுக்கு இருப்பதாகவும் அதற்காக பாடசாலையின் சிரேஷ்ட மாண குவத் தலைவர்களுக்கு பாடசாலை நாள்களில் இருந்தே பொறுப்பான சில பணிகளை செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழகக் கல்வி மிகவும் அழகானது எனவும், பகிடிவதையால் மாணவர்கள் உடல் மற்றும் மன உளைச்சலுக்கு உள்ளாகும் நிலைமை அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்கான தீர்வுகளை முன்வைக்க தாம் செயற்பட்டு வருவதாகவும் வலியுறுத்தினார்.

றோயல் கல்லூரியின் அபிவிருத்திக்காகவும் கல்லூரியின் நற்பெயருக்காகவும் மாணவர் தலைவர் சபை ஆற்றுகின்ற பங்களிப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் பாராட்டினார்.

இந்த நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.

# எதிர்கால அரசியல் தொடர்பில் குழப்பத்தில் பிரசன்ன ரணதுங்க!

ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தனது எதிர்கால அரசியல் பயணம் தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை வெளியிட உள்ளார் எனத் தெரியவருகிறது.

சவாலை ஏற்றுக்கொண்ட தலைவருடன் முன்நோக்கி செல்வதா அல்லது கடந்த கால நிலைப்பாட்டில் இருந்து செயற்படுவதா என்பது தொடர்பாக அவரது தேர்தல் தொகுதியின் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பின் முடிவுகள் பிர சன்ன ரணதுங்கவிடம் இருக்கின்றன. பிரான்ஸ் நாட்டுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று (திங்கட்கிழமை) நாடு திரும்பியுள்ளார். இதன் பின்னர் அந்த விசேட அறிக்கையை வெளியிடுவார் எனக் கூறப்படுகிறது. பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.



## பொங்கலுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்லஸ்தேவானந்தா, மனு நாணயக்கார மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாகல ரத்நாயக்க, ஆர். யோகராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன், ஜனாதிபதியுடன் முக்கிய சில விடயங்கள் தொடர்பில் நேரில் பேசினார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நானும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு பற்றியும், கொழும்பில் பொலிஸ் பதிவு பற்றியும் உரையாடினோம். இப்போது சமாதான காலம் நிலவுவதால், வீடு வீடாக சென்று பொலிஸ் பதிவு பத்திரங்களை விநியோகம் செய்து, விபரங்களைத் திரட்ட வேண்டிய அவசியம் என்ன என நான் கேட்டேன். மேலும், இப்படி திரட்டப்படும் விபரங்கள் தவறான நபர்கள் கைகளுக்குப் போவதைத் தடுக்க முடியாது எனவும் கூறினேன். தற்போது யுத்தம் இல்லை என்பதால் இதற்கென்ன அவசியம் என்று அமைச்சர் டக்லஸ் தேவானந்தாவும் கருத்து கூறினார். பொலிஸ் பதிவு பற்றி ஐ.ஜிக்கு பணிப்புரை விடுப்பதாக ஜனாதிபதி சொன்னார்.

தீபாவளியில் விடுவிக்கப்பட்டதைப் போல், தைப்பொங்கலுக்கு இன்னொரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கத் தான் எண்ணியுள்ளார் என்று ஜனாதிபதி மேலும் சொன்னார். அருகிலிருந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் அமைச்சர் மனு நாணயக்கார, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாகல ரத்நாயக்க, ஆர். யோகராஜன் ஆகியோரும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு பற்றி சாதகமாக கருத்து பகிர்ந்தனர்.

இதன்மூலம்தேசிய இனப்பிரச்சினை தீர்வுதொடர்பான பரந்துபட்ட பேச்சுகளை ஆரம்பிக்க எண்ணியுள்ளதாகவும் ஜனாதிபதி சொன்னார்.

இத்தகைய நடவடிக்கைகள், நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளாகக் கருதப்படும் என நான் ஜனாதிபதியிடம் கூறினேன். இவற்றைத் தொடர்ந்து செய்யும்படி வேண்டுகோள் விடுத்தேன்.

காலிமுகத்திடல் போராட்டம் மற்றும் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு ஆகியவை தொடர்பில் கைதாகி உள்ளோர் தொடர்பில் தயக்கம் இருப்பதாக ஜனாதிபதி மற்றும் அரசு தரப்பினர் கருத்துக்களில் இருந்து தெரியவந்தது. அவர்களையும் விடுவிக்க வேண்டும் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையாவது இடைநிறுத்தம் செய்யப்பட வேண்டும் எனவும், ஆனால், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது எனது நிலைப்பாடு எனவும் நான் ஜனாதிபதியிடம் கூறினேன். ஐந்து முதல் இருபது வருடங்கள் வரை சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் பிரச்சினை விசேடமாக கருதப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினேன்.

சிங்கள மக்கள் மத்தியில், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு தொடர்பில் சாதகமான எண்ணப்பாடு இன்று நிலவுகின்றது எனப் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர் மனு நாணயக்கார, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க ஆகியோரும் கூறினர்.

மலையக மக்கள் மத்தியிலான, பெருந்தோட்டப் பிரிவினர் பற்றி நான் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணை பற்றி ஜனாதிபதி அறிந்திருந்தார். பெருந்தோட்டப்பகுதிகளிலேயே 51 விகித உணவின்மை பிரச்சினையும், இதையடுத்தே, நகரங்களில் 43 விகிதமும், கிராமங்களில் 34 விகிதமும் உணவு பாதுகாப்பின்மை இருப்பதாக ஐ.நா. நிறுவனங்கள் கண்டறிந்து கூறி இருப்பதை நான் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க விசேட ஒதுக்கீட்டுத் திட்டத்தையும், அவற்றை ஆராய ஜனாதிபதி செயலணியையும் அமைக்கவும் கோரினேன் – என்றார்.

இதேவேளை, அரசமைப்பின் 34 ஆவது சரத்தின்படி, இலங்கை நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், சிறையிலுள்ள 8 தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு, தீபாவளித் தினமான நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

## இலங்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிபெற்ற ஆட்சியாளர்களும் தோற்கடிக்கப்பட்ட இலங்கைத் திருநாடும்' என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அடிப்படை வாதங்களான இனவாதம், மதவாதம், நிறவாதம், குலவாதம், பிரதேசவாதம் என்பன பல்லின மக்களின் தேசிய ஒற்றுமைக்கு சவால்களாக அமைகின்றன. அந்தவகையில் இலங்கையில் இனவாதம், மதவாதம் என்பவை கூர்மையான பிரிவினை ஆயுதங்களாக மாறி பல்லின மக்களின் தேசிய ஒற்றுமையைப் பிளவுபடுத்தி வந்துள்ளது. அந்தவகையில் சிங்கள ஆட்சியாளர்கள் சிங்கள இன, பௌத்த மத அடிப்படை வாதத்தினை அரசியல் முதலீடாகப் பிரயோகித்து தேர்தலில் வெற்றிகளைக் குவித்து வந்துள்ளனர்.

பண்டாரநாயக்க, ஸ்ரீமா, ஜெயவர்தனா, மஹிந்த, கோட்டா போன்ற அரசியல் தலைவர்கள், தேர்தல் சந்தைகளில் வெற்றிகொள்வதற்காக இனவாத மதவாதப் பேச்சுகள், செயல்களால் அரசியலை அனல்களாக மாற்றி தேர்தல்களில் வெற்றிக்கனியைப் பறித்துக் கொண்டனர்.

அதன் பின்னர் அதிகாரத்திமிர்களோடு நாட்டை ஆட்சி செய்து சுகபோகமாக வாழ்த்துள்ளனர். 74 சதவீதமான சிங்கள மக்கள் 74 ஆண்டுகளாக இன மதவாதிகளுக்கு வெற்றிகளை வழங்கினர். ஆனால், வெற்றி பெற்ற தலைவர்கள், நாட்டுக்கும், மக்களுக்கும் படுதோல்விகளையே பெற்றுக்கொடுத்தனர்.

தேசிய ஐக்கியம், தேசிய பொருளாதாரம், ஒற்றையாட்சி முறை, பல்லின மத இணக்கப்பாடு, புத்திஜீவிகளின் பங்களிப்பு, செயற்பாடு குறைந்த கோட்பாட்டுக் கல்வி முறை, தொழில் வாய்ப்பு, புலம்பெயர்ந்த மக்களின் பங்களிப்பு, அரசியல் கட்சிகளின் அர்ப்பணிப்பு, தேசிய வளப்பயன்பாடு போன்ற அனைத்தும் தோல்வியடைந்ததால் நாடு தோற்று வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.

நூகர்வுப் பணவீக்கம் 74 சதவீதமாகவும், உணவுப் பணவீக்கம் 94 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. பொருட்களின் விலைவாசி தொடர்ந்தும் ஏறிக்கொண்டுள்ளது. மக்களின் வருமானம் குறைந்த மட்டத்தில் உள்ளது. இதனால், மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர். கடன்கள் கேட்டு மண்டாடுகின்றனர்.

நாடு மத்தியதர வருமானத்தில் இருந்து ஏழை நாடாக மாறியுள்ளதாக அமைச்சரவை பிரகடனம் செய்துள்ளது. உலகளவில் பட்டினி வலய நாடாக இலங்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

97 இலட்சம் மக்கள் பட்டினியோடு வாழ்வதாக பொருளியல் கலாநிதியான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். இந்த நாட்டில் வாழ முடியாத நிலையில் 7 இலட்சம் மக்கள்நாட்டைவிட்டுவெளியேறியுள்ளனர். எனவே, தேர்தல்களின் போது இனவாதிகள், மதவாதிகள், அடிப்படை வாதங்களால் வெல்லுகின்றனர். ஆனால், நாடும் மக்களும் தோல்வியுற்ற நிலையில், நாடு வங்குரோத்து நிலையில் உள்ளது. வெற்றியடையும் அடிப்படைவாதிகள் பலர் அதிகார நாற்காலிகளில் இருந்து கொண்டு சுயவிருத்தி அரசியலில் ஈடுபடுகின்றனர். ஊழல், மோசடிகள், கையூட்டுகளுக்கு இங்கு தட்டுப்பாடுகள் இல்லை. ஆள்வோர்கள் செல்வத்தில் திழைக்கின்றனர். ஆளப்படும் பெரும்பான்மையான மக்கள் ஏழ்மை வறுமையில் மிதக்கின்றனர். உயரே பறக்கும் பட்டங்களாய் ஆட்சியாளர்கள் பளபளக்கின்றனர். பறக்க உதவும் நூல்களாய் ஏழ்மையில் மக்கள் அல்லலுறுகின்றர்.

மொத்தத்தில் இனவாதமும் மதவாதமும் இலங்கைத் திருநாட்டைத் தோல்வியடைய வைத்துள்ளது. தொழிலாளர் வர்க்க, மத்தியதர வர்க்க மக்களைவறுமைக்குள்தள்ளியுள்ளது. இன, மத அடிப்படைவாதங்களால் அரசியலில் வெற்றிபெறும் ஆட்சியாளர்கள், ஊழல், மோசடிகளால் தமது பொருளாதாரத்தை வளம்படுத்திக் கொள்கின்றனர் – என்றுள்ளது.

## சிறுவன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் பணிபுரிபவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இணுவில் கலாஜோதி விளையாட்டு மைதானத்துக்கு அருகிலுள்ள உறவினர் வீட்டுக்கு நேற்று மாலை 3.30 மணியளவில் சைக்கிளில் சென்று வீடுதிரும்பும்போது, தெல்லிப்பழையிலிருந்து 2 மோட்டார் சைக்கிளில் சென்ற 4 பேர் கொண்ட குழுவே வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

தலையிலும், கையிலும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக சிறுவன் சேர்க்கப்பட்டுள்ளான். வாள் வெட்டுக்கான காரணம் தெரியவரவில்லை.

## இளைஞன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தப்பிச் சென்ற பஸ்ஸை கிராம மக்கள் கலைத்துப் பிடித்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் பஸ்ஸாய்க் கைப்பற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றதுடன், 50 வயதான சாரதியையும் கைது செய்தனர்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர் மதுபோதையில் சாரத்தியம் மேற்கொண்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

## திடீரென......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டிருந்த பாதிப்பைச் சரிசெய்து 'வட்ஸ் அப்' மீளமைக்கப்பட்டுள்ளது.

'வட்ஸ் அப்' செயலியின் மத்திய பரிமாற்றகட்டமைப்பில்ஏற்பட்டதொழினுட்ப பிரச்சினையே செயலிழப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவும், 2021ஆம் ஆண்டு ஆயிரத்து 105 ஆகவும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் 519 ஆகவும் இடைவிலகிய மாணவர்கள் எண்ணிக்கை உள்ளது என்று வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் வழங்கிய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திடம் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் ஆகக்கூடுதலாக மடுக்கல்வி வலயத்தில் 94 பேர் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர்.

மன்னார் கல்வி வலயத்தில் 72 பேரும், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் 52 பேரும், கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் 51 பேரும், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 48 பேரும் இடைவிலகியுள்ளனர்.

அதிகளவில் ஆண்களே இடைவிலகியுள்ளதுடன் 10ஆம் மற்றும் 11ஆம் தரங்களைச் சேர்ந்தவர்களே இதில் அதிகமாகவும் உள்ளனர்.

2021ஆம் ஆண்டு வடக்கு மாகாணத் ணதில் ஆகக் கூடுதலாக கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் 181 பேர் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர். வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து 148 பேரும், மன்னார் கல்வி வலயத்திலிருந்து 135 பேரும், கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திலிருந்து 119பேரும் இடைவிலகியுள்ளனர்.

இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையில் வடக்கு மாகாணத்தில் ஆகக் கூடுதலாக வலிகாமம் கல்வி வலயத்தில் 123 பேர் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர். வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 110பேரும், மன்னார் கல்வி வலயத்தில் 101பேரும் இடைவிலகியுள்ளனர்.

கொரோனாப் பெருந்தொற்றின் பின்னரான அதிகரித்த இடைவிலகல்களுக்கான காரணம் தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமாரிடம் கேட்டபோது,

வறுமையும் இதற்குப் பிரதான காரணம். அதனை விட கொரோனா காலத்தில் பாடசாலைகளுடன் தொடர்பில்லாது நீண்ட காலம் இருந்தமையால் மாணவர்கள் தொழில்களை நாடிச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. சில பெற்றோர் தமது பெண் பிள்ளைகளுக்கு திருமணமும் செய்து வைத்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

